//மிகவும் அவசரம்// //நினைவூட்டு//

**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (தொழிற்கல்வி) செயல்முறைகள், சென்னை –6**

ந.க. எண் 12328 / இ / இ2 / 2025 **நாள் 01 .07.2026**

பொருள்: பள்ளிக்கல்வி –அனைத்து வகை பள்ளிகளில் பயிலும் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ/மாணவியர்களுக்கு பயிலும் பள்ளிகளிலே சாதிச் சான்றிதழ் மற்றும் இருப்பிடச் சான்றிதழ் வழங்குதல் சார்ந்து – சான்றுகள் உள்ள மாணாக்கர்களின் எண்ணிக்கை– School Login App– பதிவேற்றம் மேற்கொள்ளுதல் மற்றும் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு மாணாக்கர்களின் ஆதார் எண்ணை பதிவேற்றம் மேற்கொள்ள கோருதல் – தொடர்பாக.

பார்வை

1. அரசாணை (நிலை)எண்.06, பள்ளிக் கல்வி (பக5(2)த்துறை நாள்.09.01.2026.
2. இவ்வியக்க இயக்குநரின் செயல்முறைகள் இதே எண்ணிட்ட கடிதம் நாள்.11.06.2026 மற்றும் 22.06.2026

/////

பார்வை 2 இல் காணும் கடிதத்தின் மீது அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

2026–2027 ஆம் கல்வியாண்டில் 10 ஆம் வகுப்பில் பயிலும் மாணாக்கர்கள் 12 ஆம் வகுப்பு மாணாக்கர்களில் (இரு வகை சான்றிதழ்கள் பெற்றிருப்பவர்கள் விவரம் மற்றும் சான்றிதழ்கள் தேவைப்படும் மாணாக்கர்களின் விவரம் ஆகியவற்றை தமிழ்நாடு கல்வி மேலாண்மை தகவல் மைய School Login–இல் உடனடியாக சான்றுகள் பெற்றிருக்கும் மாணாக்கர்கள்/ தேவைப்படும் மாணாக்கர்கள் விவரங்களை ஆம்/இல்லை (Yes/No) என பதிவுகள் உடனடியாக மேற்கொள்ளுமாறு அனைத்து பள்ளி தலைமையாசிரியர்களுக்கும் அறிவுரைகள் வழங்கி இப்பணிகளை விரைந்து முடித்திடுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது.

இரு வகை சான்றுகள் பயிலும் பள்ளிகளிலேயே வழங்குவதற்கு ஆதார் எண் பதிவுகள் என்பது மிகவும் அவசியம் ஆகும். எனவே இருவகை சான்றுகள் பெற்றிருக்கும் மாணாக்கர்கள் / தேவைப்படும் மாணாக்கர்கள் விவரங்களை ஆம்/இல்லை (Yes/No) என பதிவுகள் மற்றும் ஆதார் எண் பதிவுகள் ஆகியவை ஜீலை 13 –ஆம் தேதி மாலை 5 மணிக்குள் பதிவேற்றம் மேற்கொள்ளுமாறு அனைத்து பள்ளி தலைமையாசிரியர்களுக்கும் அறிவுரைகள் வழங்கி இப்பணிகளை விரைந்து முடித்திடுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது. .

இணை இயக்குநர் (தொழிற்கல்வி)

பெறுநர்
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
(மின்னஞ்சல் மூலம்)
நகல்: அனைத்து மாவட்ட கல்வி அலுவலர்கள். (மின்னஞ்சல் வழியாக)

நகல்:
வருவாய் நிருவாக ஆணையர்,
எழிலகம், சேப்பாக்கம், சென்னை –05 தகவலுக்காக பணிவுடன் அனுப்பப்படுகிறது